<u>**கூடுதல் மாவட்ட நீதிமன்றம்,**</u>
<u>**ஸ்ரீவில்லிபுத்தூர்**</u>

**OS.No: 132/2021** **நாள் 05.03.2026.**

**வாசா.1, திருமதி.S .லட்சுமிபிரபா**

**வா.சா.1 மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணத்தின் பேரில் எதிர்வாதி தரப்பில் குறுக்கு விசாரணை–**

இந்த வழக்கு பற்றிய விபரம் எனக்கு நேரடியாக தெரியும். இந்த வழக்கானதை லிங்கராஜ் என்பவர் என்னிடமிருந்து ரூ.22 லட்சம் ரூபாயை கடனாக என்னிடமிருந்து ரொக்கமாக வாங்கினார் மீது தொகை ரூ.3 லட்சத்தை சீட்டு பணம் வரவேண்டியதில் சேர்த்து மொத்தம் ரூ.25 லட்சம் கடன் வாங்கியதாக சொல்லி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன். ரூ.22 லட்சத்தை எதிர்வாதியானவர் எந்த எந்த தேதியில் எவ்வளவு தொகையை என்னிடமிருந்து வாங்கினார் என்று நான் தாக்கல் செய்துள்ள இந்த வழக்கிலும் என்னுடைய சாட்சிய பிரமாண பத்திரிக்கையிலும் சொல்லியுள்ளேனா என்று கேட்டால் நான் சொல்லவில்லை தனியாக டைரியில் எழுதி வைத்துள்ளேன். அந்த டைரியை நீதிமன்றத்தில் என்னால் தாக்கல் செய்ய முடியும். ரூ.3 லட்சம் எனக்கு சீட்டு வகையில் வரவேண்டி உள்ளது என்று நான் சொல்லும் போது அதற்கான ஆவணமும் நான் தாக்கல் செய்துள்ளேனா என்று கேட்டால் தாக்கல் செய்யவில்லை. நானும், லிங்கராஜும் சேர்ந்து சீட்டு நடத்தி வந்தோம் என்பதற்கான ஆவணத்தையும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. லிங்கராஜுக்கு கொரோனா தொற்று ஏற்பட்டு மருத்துவ சிகிச்சையில் இருந்தார் என்றால் அவருக்கு கொரோனா தொற்று இல்லை. நான் தாக்கல் செய்துள்ள சாட்சிய பிரமாண பத்திரிக்கையில் பாரா 4ல் எதிர்வாதியின் கணவர் லிங்கராஜுக்கு கொரோனா தொற்று நோய்பரவி கடந்த 02.08.2021ம் தேதி திருநெல்வேலி ஹை கிரவுண்ட் மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டிருந்தார் என்று நான் சொல்லியுள்ளேன் என்று கேட்டால் எதிர்வாதி தரப்பில் சொன்னதை வைத்து தான் நான் சாட்சிய பிரமாண பத்திரிக்கையில் சொல்லியுள்ளேன். 02.08.2021ம் தேதில் அவர் திருநெல்வேலி ஹை கிரவுண்ட் மருத்துவமனையில் தீவிரசிகிச்சை பிரிவில் சேர்க்கபட்டிருந்தார் என்று சொன்னால் நான் போய் பார்த்த போது அவர் அவசர சிகிச்சை பிரிவில் இல்லை ஆனால் மருத்துவமனையில் இருந்தார். அவர் சிகிச்சை பலன் அளிக்காமல் 12.08.2021ம் தேதியில் திருநெல்வேலி ஹை கிரவுண்ட் மருத்துவமனையில் வைத்து இறந்துபோனார் என்றால் சரிதான். அவர் இறந்த பின்பு நான் அவருடைய மனைவி மற்றும் இறந்துபோன லிங்கராஜின் சகோதரியான விஜயலட்சுமி என்பவர் பெயரிலும், விஜயலட்சுமியின் கணவர் கிருஷ்ணசாமி என்பவர் பெயரிலும், கிருஷ்ணசாமியின் அண்ணன் மகன் ராஜ்குமார் , மற்றும் லிங்கராஜின் தாய்மாமா பாலசுப்பிரமணியன் என்பவர்களுக்கு எதிராக நான் வன்னியம்பட்டி காவல் நிலையத்தில் புகார் கொடுத்திருந்தேன் என்றால் சரிதான் அந்த புகாரின் நகலை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. என்னிடம் காட்டப்படும் புகார் தான் நான் வன்னியம்பட்டி காவல் நிலையத்தில் கடந்த 22.08.2021ம் தேதியில் கொடுத்ததாகும். அந்த புகார் **பிவாசாஆ.1**. நான் கொடுத்த புகாரில் லிங்கராஜ் மருத்துவமனையில் சிகிச்சையில்

இருந்த போது ராஜ்குமாரிடம் லிங்கராஜ் என்பவர் என்னிடம் ரூ.22 லட்சத்தை கடன் பெற்றிருந்ததை ஒத்துக்கொண்டு விட்டு ராஜ்குமாரிடம் ரூ.22 லட்சத்தை எனக்கு செலுத்திவிடுங்கள் என்று கூறினார் என்றும் அதற்கு ராஜ்குமாரும் ரூ.22 லட்சத்தை எனக்கு செலுத்திவிடுவதாக உறுதி அளித்தார் என்றும் மேலும் லிங்கராஜ் என்னிடம் கடனாக பெற்றுக்கொண்ட ரூ.22 லட்சத்திற்கு அவரது டைரியில் எழுதி வைத்து கையெழுத்து செய்துள்ளதாக கூறினார் என்று நான் காவல் நிலையத்தில் கொடுத்த புகாரில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். நான் காவல் நிலையத்தில் கொடுத்திருந்த புகாரில் தற்போது நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள வாசாஆ.1 முதல் வாசாஆ.3 வரையிலான ஆவணங்களை பற்றி சொல்லவில்லை என்றால் சரிதான். நான் புகார் கொடுத்த சமயத்தில் மேற்படி வாசாஆ.1 முதல் வாசாஆ.3 வரையிலான ஆவணங்களை லிங்கராஜ் எனக்கு எழுதிக்கொடுக்கவில்லை என்றால் அது சரியல்ல. எழுதிக்கொடுத்திருந்தார். அந்த புகார் சம்மந்தமாக வன்னியம்பட்டி காவல் நிலையத்தில் விசாரணை செய்தார்கள் என்றால் சரிதான். அந்த விசாரணையில் நானும், விஜயலட்சுமியும், ராஜ்குமாரும், மாரியம்மாளும் ஆஜரானோம் என்றால் சரிதான். காவல் நிலையத்தில் வைத்து அவரவர்கள் தரப்பில் வாக்குமூலங்களை எழுதிக்கொடுத்தோம் என்றால் சரிதான். என்னிடத்தில் காண்பிக்கப்படும் வாக்குமூலம் தான் நான் காவல் நிலையத்தில் கொடுத்தது என்று சொன்னால் சரிதான். நான் கொடுத்த புகாருக்கு புகார் மனு ஏற்பு ரசீதை கொடுத்தார்கள் என்றும்அது என்னிடத்தில் காண்பிக்கப்படுபவை என்றால் சரிதான். மேற்படி காவல் நிலையத்தில் நடைபெற்ற விசாரணை , மேற்படி வாக்குமூலம், என்னுடைய புகார் மனு, ரசீது ஆகியவைகள் விஜயலட்சுமி என்பவர் தகவல் அறியும் உரிமை சட்டம் 2005ன் படி 02.09.2021ம் தேதியிட்ட மனுவின்பேரில் ந.க.எண்.1022/RTI/கூ.கா.க/த(இ)/விருது/2021 தேதி 18.09.2021 படி பொது தகவல் அலுவலர் மற்றும் கூடுதல் காவல் கண்காணிப்பாளர் தலைமையிடம் விருதுநகர் மாவட்டம் வழங்கியது என்றால் சரிதான் அது **பி.வா.சாஆ.2 வரிசைகள் (பக்கங்கள் மொத்தம் 8)**. இந்த புகாரை நான் கொடுத்த பின்பு விஜயலட்சுமி, மாரியம்மாள், ராஜ்குமார் ஆகியோர்கள் எனக்கும் , வன்னியம்பட்டி காவல் நிலைய சார்பு ஆய்வாளருக்கும் வழக்கறிஞர் மூலமாக 31.08.2021ம் தேதியில் ஒரு அறிவிப்பை அனுப்பியிருந்தார்கள் என்றால் சரிதான். எனக்கு வந்த வழக்கறிஞர் அறிவிப்பு மற்றும் போஸ்டல் கவர் என் மூலமாக ஏற்கனவே வாசாஆ.4 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த அறிவிப்புக்கு நான் என்னுடைய வழக்கறிஞர் மூலம் 13.09.2021ம் தேதியில் ஒரு பதில் அறிவிப்பை அனுப்பியிருந்தேன் என்றால் சரிதான். அந்த பதில் அறிவிப்பை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் கடந்த 13.09.2021ம் தேதியில் அனுப்பிய பதில் அறிவிப்பு தான் நான் அனுப்பிய பதில் அறிவிப்பு என்றால் சரிதான். அது **பி.வாசாஆ.3**. பிவாசாஆ.3 ஆவணத்திலும் வழக்கில் தாக்கல் செய்துள்ள வாசாஆ.1 உறுதிமொழி ஒப்பந்த பத்திரம் மற்றும் 2 புரோட்டுகளான வாசாஆ.2 மற்றும் வாசாஆ.3 பற்றி சொல்லவில்லை என்று சொன்னால் சரிதான். வாசாஆ.1 முதல் வாசாஆ.3 வரையிலான ஆவணங்கள்

27.04.2021ம் தேதிய ஒரே நாளில் எழுதப்பட்டவைகள் என்றால் சரிதான். மேற்படி வாசாஆ.1 முதல் வாசாஆ.3 வரையிலான ஆவணங்களில் சாட்சி கையொப்பம் செய்த நபர்களும் மேற்படி ஆவணங்களை எழுதிய நபரும் ஒன்றானவர்கள் என்றால் சரிதான். வாசாஆ.1 முதல் வாசாஆ.3 வரையிலான ஆவணங்கள் குறித்து நான் அனுப்பிய 13.09.2021ம்தேதியிட்ட வாசாஆ.6 அறிவிப்பில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அதற்கு முன்பு நான் அனுப்பிய பிவாசாஆ.3 அறிவிப்பில் சொல்லவில்லை என்றால் சரிதான். வாசாஆ.1 ஆவணத்தின் முத்திரைதாள் வாங்கிய தேதியாக 27.04.2021 என்று உள்ளது என்றால் சரிதான். வாசாஆ.1 ஆவணத்தினை எந்த தேதியில் எங்கு வைத்து எப்போது எழுதப்பட்டது என்று வாசகம் கண்டுள்ளதா என்று கேட்டால் 27.04.2021ம் தேதியில் தான் எழுதப்பட்டது. நான் சொல்வது போல் வாசாஆ.1 ஒப்பந்த பத்திரம் ஏற்படவில்லை என்றும் நானும் சாட்சிகளும் சேர்ந்து மோசடியாக வாசாஆ.1 ஒப்பந்த ஆவணத்தை தயார் செய்துள்ளோம் என்றால் அது சரியல்ல. அதுபோல் வாசாஆ.2 மற்றும் வாசாஆ.3 ஆவணங்களும் எதிர்வாதிகள் எனக்கு எழுதிக்கொடுத்த ஆவணங்கள் அல்ல என்றும் அவைகளை நானும் சாட்சிகளும் சேர்ந்து வழக்கிற்காக வேண்டி மோசடியாக உற்பத்தி செய்துகொண்டோம் என்று சொன்னால் அது சரியல்ல. வாசாஆ.1 ஒப்பந்த பத்திரமும் இந்திய முத்திரை கட்டணம் சட்டப்படி செல்லக்கூடியது அல்ல என்று சொன்னால் அது சரியல்ல. இறந்துபோன லிங்கராஜ் என்பவர் கடந்த 02.08.2021ம் தேதியில் அவருக்கு கொரோனா தொற்று ஏற்பட்டு அவர் 12.08.2021ம்தேதியில் இறந்துபோனார் என்றும் அவர் இறப்பதற்கு முன்பு அவர் எனக்கு எந்தவிதமான ஆவணங்களையும் எழுதிக்கொடுக்கவில்லை என்று சொன்னால் அது சரியல்ல. நானும், லிங்கராஜும் சேர்ந்து எந்தவிதமான சீட்டு தொழிலும் செய்யவில்லை என்றும் அவர் என்னிடத்தில் இருந்து எந்தவிதமான கடன் தொகையும் பெற்றுக்கொள்ளவில்லை என்று சொன்னால் அது சரியல்ல. வாசாஆ.8 முதல் வாசாஆ.10 வரையிலான வங்கி கணக்கு விபரம் பற்றி யார் யாருக்கு எவ்வளவு தொகை என்பதுகுறித்து நான் வழக்குரையிலும் சாட்சிய பிரமாண பத்திரிக்கையிலும் குறிப்பிட்டு சொல்லிக்கொள்ளவில்லை என்றும் வாசாஆ.8 முதல் வாசாஆ.13 வரையிலான ஆவணங்கள் லிங்கராஜுக்கு தான் நான் பணம் கொடுத்தேன் என்பதை காண்பிக்ககூடிய ஆவணங்களாக இல்லை என்று சொன்னால் அது சரியல்ல. நான் வழக்குரையில் உண்மையான சங்கதிகளை மறைத்து பொய்யான சங்கதி கண்டு இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் அதுசரியல்ல. வாசாஆ.1 முதல் வாசாஆ.3 வரையிலான ஆவணங்கள் அனைத்தும் தனித்தனியானவை என்றும் நான் தனித்தனியாக தான் அந்த ஆவணங்களை பொறுத்து வழக்கை தாக்கல் செய்யவேண்டும் என்றும் வாசாஆ.1 முதல் வாசாஆ.3 வரையிலான ஆவணங்களை வைத்து ஒரே வழக்காக என்னால் தாக்கல் செய்துகொள்ள முடியாது என்று சொன்னால் அது சரியல்ல. வாசாஆ.1 ஆவணத்தின் மூலமாக நான் பிராது தொகையை கோருகிறேனா அல்லது வாசாஆ.2 மற்றும் வாசாஆ.3 ஆவணங்களின்அடிப்படையில் தொகையை கோருகிறேனா என்று நான் வழக்குரையில் குறிப்பிட்டு சொல்லவில்லை

என்றால் அப்படியில்லை. எனவே வாசாஆ.1 முதல் வாசாஆ.3 வரையிலான ஆவணங்கள் அடிப்படையில் நான் வழக்கில் கோரிய பரிகாரங்கள் அடிப்படையில்கோருகிறேன் என்று வழக்குரையில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றும்அதனால் நான் தாக்கல் செய்துள்ள இந்த பிராதை தள்ளுபடி செய்யப்படவேண்டியது என்று சொன்னால் அதுசரியல்ல. லிங்கராஜ் என்னிடமிருந்து எந்தவிதமான தொகையும் கடனாக வாங்கவில்லை என்றும் நான் வழக்கிற்காக வேண்டி பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் அது சரியல்ல. இறந்துபோன லிங்கராஜுக்கு ஒரு வீடு உள்ளது. நான் தாக்கல் செய்துள்ள வாசாஆ.1 முதல் வாசாஆ.3 வரையிலான ஆவணங்களின் அடிப்படையில் எனக்கு தொகை கிடைக்கப்பெறவேண்டும் என்றால் இந்த வழக்கில் உள்ள எதிர்வாதிகளுக்கு எதிராக என்னால் தொகை கேட்டு பரிகாரம் கோர முடியாது என்றும் இறந்துபோன லிங்கராஜ் என்பவரின் சொத்தான வீடு மீது தான் நான் நடவடிக்கையை எடுத்துகொள்ள முடியும் என்றால் அது சரியல்ல. நான் எதிர்வாதி மீது தாக்கல் செய்ய வழக்கானது பொய்யானது என்றும் சட்டப்படி எனக்கு பிராதில் கோரியுள்ள தொகை கிடைக்கபெறாது என்று சொன்னால் அது சரியல்ல.

**சாட்சியின் கையொப்பம்**

**Name of the Interpreter : Not necessary**

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act, 1989 (Central Act 44 of 1989 on the 05th day of March 2026.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு. தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் செய்யப்பட்டது.

கூடுதல் மாவட்ட நீதிபதி,
கூடுதல் மாவட்ட நீதிமன்றம்,
ஸ்ரீவில்லிபுத்தூர்.